ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

ஒவ்வொரு பிராணியும் உயர்ந்த சுகத்தையே அடையவேண்டுமென நினைத்தும், அவ்வாறு சுகத்தையடைய நேராமலும், கிஞ்சிற்றேனும் துக்கம் வரக்கூடாதென வேண்டியும், அது அடிக்கடி நேர்ந்துகொண்டுமிருப்பதைக்கவனித்துப்பார்த்தால் அவைகட்கு அஸாதாரணகாரணம் ஒன்றிருக்கவேண்டுமென்று ஸாமான்யமாக எவருக்குந் தோன்றாமலிருக்காது. ஆனால், அவற்றின் காரணவிசேஷத்தைப்பற்றி விசாரிக்கும்போது நம்முன்னோர்களது அபிப்பிராயமும் தற்காலத்திய சிலரது அபிப்பிராயமும் ஒற்றுமைப்படவில்லையென்பது அவர்கள் வார்த்தையிலிருந்து தெரியவருகிறது. முன்னோர்கள் அபிப்பிராயப்பட்டதை அறிவிப்பதற்காக எழுதி வைக்கப்பட்டிருக்கும் சுருதி ஸ்மிருதி புராணேதிஹாஸாதி வாக்கியங்களை முற்றிலும் மாற்றுவதற்காகத் தற்காலத்தியவர் கூறும் வார்த்தைகளைக் கேட்டால், இவர்கள் விபரீத அபிப்பிராயங்கொண்டிருப்பதாகத் தெரிய வருகிறது. அவர்களது உட்கருத்தை மற்றொருவருக்கெடுத்துக்காட்டுவதற்காக அமைந்துள்ள கருவிகளுள் பாஷையே முதன்மையுடையதாகும். ஒரே அபிப்பிராயங்கொண்டவர்களெல்லாம் ஒரேவிதமாகத்தான் பேசுவார்கள். அபிப்பிராயபேதமுள்ளவர்கள் ஒருவருக்கொருவர் விரோதமாகவே பேசுவார்களென்பது ஸ்பஷ்டமல்லவா? ஆகவே தர்மாதர்ம சொரூபத்திலும் அதன் பிரமாணங்களிலும் முன்னோர்கள் கூறியிருப்பதை மறுத்தும், நியாயவிபரீதமாகப் பொருள்படுத்தியும், தற்காலத்தியவர் பிரஸங்கமேடைகளிற்பேசி திடபுத்தியில்லாதவர்களைக் கலைத்து சாஸ்திர விரோதமான வழியில் நடத்திவைப்பதற்காகச் செய்துவரும் பெருமுயற்சியின் பயனாக தர்மாதர்மவரம்பை மீறிநடக்கப்பலர் துணிந்துவிட்டார்கள். அதனால் அவர்களுக்குமாத்திரமல்ல, ஜகத்துக்கே அடிக்கடி அனர்த்தங்கள் பல நேரிடுகின்றன. தர்மாதர்மவிஷயத்தில் முன்னோர்களுக்கிருந்தபடி தற்காலத்தியவர்களுக்கு நம்பிக்கையிருக்க இடமில்லை. ஆயிரவருஷக்கணக்காக ஆயுளையடைந்து அரிய பெரிய தவம்புரிந்து தர்மத்தை அநுஷ்டித்தால் சுகமும், அதர்மத்தையனுஷ்டித்தால் துக்கமும் நேரிடுமென்பதை அன்வயவ்யதிரேகங்களால் கண்டறிந்த முன்னோர்களது ஆழ்ந்த அபிப்பிராயமெங்கே? அற்பகாலஜீவிகளான இவர்களது அபிப்பிராயமெங்கே? இதை நன்றாக விவேகிகள் ஆராய்ந்துபார்த்து உண்மையைநாடி நன்மையையடைவார்களாக.

சுபம்.

பத்திராதிபர்.

# ஆர்ய தர்மம்.

சுக்ல-௵ ஆவணி-௴ ௭௨

## ஸம்ஸ்கிருதபாஷை.

உலகத்திற் பாஷையென்பது தனது கருத்தைப் பிறருக்கு வெளியிடுங் கருவிகளில் முதன்மைபெற்றது. மனிதனுடைய பற்பல சேஷ்டைகள் உட்கருத்தை வெளியிடுவதாக்ச்சிலவிடத்துக் கண்டிருப்பினும் அவைகள் ஒளியில்லா வேளைக்குதவா? அந்த சேஷ்டையின்காலஞ்சென்றால்,அதுகாணப்படா,வெகுதூரத்திற்கு உபயோகப்படா, ஆதலால் ஓர் பாஷையின்றிக் கருத்து வெளியிடுதல் எளிதில் ஸாத்தியமில்லையென்பதுகொண்டு பாஷை அனைவர்க்கும் இன்றியமையாதது. பாஷ் என்ற தாது (வடமொழிப்பகுதி) யினின்று எற்பட்டது பாஷை என்ற பதம், சொல்லப்படுவது என்று அதன் பொருளாகும். இதனைச் சத்தமென்றுங்கூறலாம். அது தொனிவடிவமானதும், லிபி (எழுத்து) வடிவமானதுமாக இருவகைத்தாகும். பேரி, மிருதங்கம் முதலியன அடிக்கப்படும் பொழுது உண்டாகும் சத்தம் தொனியாம். அதுவும் யுத்தகளம் முதலியவிடங்களில் ஆரம்பம், முடிவு, ஜயம், பராஜயம் முதலிய விசேஷங்களைத் தெரிவிக்கின்றது. ஆயினும் காலஞ்சென்றால் கேட்கமுடியாது. ஆதலால் முக்காலத்திலும் பெரியோர்கள் திருவுள்ளத்திலுதித்த நல்ல அபிப்பிராயங்களை நமக்கு எளிதில் எடுத்துக்காட்ட முக்கிய கருவியாய் நின்றது லிபிரூபமான எழுத்தே. அது நமக்கு வெகு உபகாரஞ்செய்ய வல்லமையுடையது. அதுகொண்டு அத்தகைய பாஷையைக் கற்பது கற்பகம் போல் கருதிய பயனையெல்லாம் கொடுக்கும். பாஷையினால் நாம் பெறவேண்டிய எல்லாப்பயன்களைத்தருவதற்கு வேண்டிய அம்சங்கள் நான்கு. அவையாவன—(1) நாமறியக்கூடிய பொருள்களெல்லாவற்றையும் உணர்த்தும் வல்லமைபெற்ற சொற்கள், இவைகளே இலக்கியமெனப்படும். (2) காலங்களும், தேசங்களும் வேறுபடினும் முன்னோர் வழக்கத்திற்கிணங்கி அவர் எழுதிய புஸ்தகங்களைப் படிக்கவும், அதன் கருத்துக்களையறியவும் பாஷை வேறுபடாதிருத்தல் வேண்டுமென அதற்கேற்ப இயற்றப்பட்ட

இலக்கணம். (3) இம்மையிற் பெறவேண்டிய சுகங்களைப் பெறுதற்குச் சாதனங்களாகிய சிற்பம் முதலிய பிரத்தியக்ஷ சாஸ்திரங்கள். இவற்றை விஞ்ஞானநூல்களென மொழிவர். (4) ஒருவன் ஸம்ஸாரதுக்கம் நீங்கிப் பேரானந்தம் அடையவேண்டுவதற்குரிய மெய்ப்பொருளை விளக்கும் நூற்கள். இவைகள் ஞானநூற்கள் எனப்படும். இவை களெப்பாஷையிலுமிருப்பினும் ஸம்ஸ்கிருத பாஷையிலுள்ளதுபோல் மற்றபாஷைகளில் சுதந்திரமாயில்லை. ஆதல்பற்றி அதனைக் கற்றுணர்ந்த கல்விமான்கள் இப்பாஷைக்கு நிகர் ஒன்றுண்டெனச் சொல்லத்துணியார். நாம் கண்டமட்டிலும் தற்காலம் நமது தேசத்தில் வழங்கும் பாஷைகளில் ஒன்றேனும் இப்பாஷைப்பதங்களை, எழுத்துக்களை வாங்காமலும் எவ்விதத்திலாவது இதன் சம்பந்தத்தையடையாமலும் தானே சுதந்திரமாய்த் தனக்கு வேண்டிய அம்சங்களைப் பெற்றுள்ளனவாகத் தேடியுங் கிடைக்காது. பாருங்கள்! வேறெந்தபாஷையில் இப்பாஷையிலுள்ளதுபோல் சிருங்காரம் முதலிய ரஸங்களொன்பதும் நிறைந்து, பெயர் கேட்குமுன்னே அதிலுள்ள சரித்திரத்தின்நாயகன் முதலிய பற்பல விஷயங்களை ஊகிக்கத்தக்க நாடகம், பிரகாணம், பாணம், பிரஹஸனம் முதலிய அனேக வேற்றுமைகள் நிறைந்த காவியங்களும், செம்பொருள், ஆகுபொருள், குறிப்புப்பொருள், தாத்பரியப்பொருள் முதலிய பலவிதப் பொருள்களையுணர்த்தும் பதங்களும், ரஸங்களுக்குரிய எழுத்துக்களும் யாப்புகளுக்கேற்ப ஒரே பொருளைக் கொடுக்கத்தக்க சிறிதும் பெரிதுமான (புசங்கமம், புசங்கம், புசகம்போன்ற) வடிவங்கொண்ட சொற்களுமிருக்கின்றன. அடிக்கடி மாற்றமின்றி ஒரேரூபமாய் அனேக ஆயிரம் வருஷங்களாகப் பெரியோர்களது வழி மாறாமலிப்பாஷை நிற்பதுபோல் எப்பாஷை நிற்கின்றது?

ஸ்ரீமத் பாணினி முனிவர் முதலிய அனேக முனிவர்களாலியற்றப்பட்ட எழுத்திலக்கணம், பதவிலக்கணம், பொருளிலக்கணம், யாப்பிலக்கணம், ரஸவிலக்கணம், அணியிலக்கணம் முதலிய பற்பலவிலக்கணங்களை உணர்த்தும் சாஸ்திர நூல்களும், சோதிடம், வைத்தியம், சிற்பம், மந்திரம், யோகம், நீதி, ரஸம், ரஸாயனம் முதலிய இல்லற வாழ்க்கைக்கேற்ற பிரத்தியக்ஷ சாஸ்திர நூல்களும், ஸ்மிருதி முதலிய தர்மசாஸ்திரம் பூர்வமீமாம்ஸை முதலிய கர்மநூல்களும், உபநிடதங்கள், உத்தரமீமாம்ஸை முத

வியஞானநூல்களுமிப்பாஷையிலுள்ளது போல எப்பாஷையில் காணலாம்? இப்பெருமைபெற்ற எக்காலமிப்பாஷை பரதகண்டமெனப்பெயர் வழங்கும் ஹிந்து தேசத்தில் எல்லா வர்ணஸ்தரும், ஆச்சிரமஸ்தரும் ஆதரிக்கப்படப்பெற்று எங்கும் சிறப்புற்றோங்கி விளங்கியதோ அக்காலம் நமது தேச நடவடிக்கை வியவஹாரங்களெல்லாமிந்த ஸம்ஸ்கிருத பாஷைகொண்டே வழங்கப்பட்டு வந்தன. பின்னர் இவ்விந்தியதேசம் க்ஷத்திரியர் கையினின்று இறங்கி, அன்னியர் கைவசமானபோது கொஞ்சம் குறைவடைய நின்றது. ஸமீப இராஜ்யாதிபதிகளான சில கொடுங்கோன்மன்னர்கள் ஆளத்தலையெடுத்து, ஜனங்களை இப் பாஷை வியவஹாரத்தினின்று தடுத்து, தம் பாஷையைக் கொண்டே ஸகல வேலை நடத்திவந்ததினாலும், இப்பாஷையைக் கற்பவருக்குப் பிழைப்பில்லாமற்போனதாலும் இதனைக் காலக்கிரமத்தில் ஜனங்கள் விட்டு, வேறு வேறு பாஷையைக் கற்க முயன்றனர். அக்காலத்திலும் சில மஹானுபாவர்கள் ஆசிரியரிடம் பணிவிடைகள் செய்து, அரிதாகிய இம்மாத்ரு பாஷையை ஆதரித்து உயிர்ப்பித்துவந்தனர். தற்காலத்தில் அந்தக் கஷ்டமொன்றுமில்லை. நமது காருண்ய கவர்ன்மெண்டார் அவ்வாறு கொடுமை செய்யாது இதர பாஷையைப்போல் இப்பாஷையை விருத்தி செய்விப்பதிலும் வேண்டிய ஏற்பாடு செய்துகொடுத்திருக்கிறார்கள். நாமாக நம் தாய்பாஷையைக் கைவிட்டுவிட்டால் அவர்கள் என்ன செய்வார்கள். அதனால் நல்ல இந்த ஸமயத்தில் இப்பாஷையை வெளிக்குக் கொண்டுவந்து, இதன் மேன்மைகளை விளக்கி இதைப் பரவச் செய்யவேண்டியது ஒவ்வொருவரின் கடமையாகும். இப்பாஷை பூர்த்தி இல்லாதது என்றெண்ணி, கொஞ்சமிருப்பதையும் ஒழித்துவிடுவது ஸரியல்ல. இதன் பூர்த்தி இப்பொழுதும் குறைவின்றியுளதேயென்பது எல்லோரும் எளிதில் தெரிந்துகொள்ளும்படி இப்பொழுது அப்பாஷையிலுள்ள கிரந்தங்கள், அவற்றை இயற்றினோர், அவற்றை வெளியிட்டவர், அவற்றின் விஷயங்கள், வேறுபாடுகள் இவைகளை விருத்திக்குக்கொண்டுவர, தள்ளவேண்டியதும் சேர்க்கவேண்டியதுமான நடவடிக்கைகளை நடத்தமுயற்சித்து அந்த ஸ~கிருதபலத்தை யாவரும் அடைவார்களாக.

சுபம்.

பத்திராதிபர்.

# ஸாமவேத உபாகர்மம்.

இவ்வருஷத்தில் ஷீ கர்மாவானது ஆவணி-ளீ 21வ என்றும், 22வ என்றும் பஞ்சாங்கங்களில் பேதமாய் போட்டிருப்பதால் என்று செய்வது உசிதமென்று ஆராய்ச்சி செய்வது உசிதமேயாகும்.

ஸாமவேதிகளுக்கு முக்கியகாலம்,

"प्रोष्ठपदीं हस्तेनाध्यायानुपाकुर्युः, श्रावणीमित्येके ।"

என்று ஸூத்திரத்தினல் பாத்திரபதமாஸம் ஹஸ்த நக்ஷத்திரம் முக்கிய காலமென்றும், சிராவணமாஸம் பூர்ணிமை இரண்டாவது காலமென்றும் கூறப்பட்டிருக்கிறது.

மேலும் மற்றோர்சார்பாரான ஜைமினீயமதத்தில் ஆறுகாலங்கள் கூறியுள்ளது. அதைவிட்டு பிரஸ்தாபமதத்தை விசாரிப்போம்.

மேற்கூறிய இரண்டுகாலங்களிலும் தோஷமிருந்தால் முந்தியதாக பாத்திரபத ஹஸ்தமே விசேஷமாகும். இவ்வருஷத்திய பாத்திரபத ஹஸ்தமாகிய ஆவணி-ளீ 21வ வியாழக்கிழமை இதற்குரிய தோஷங்கள் யாதொன்றும் ஏற்படக்காணோம். அன்று 9நாழிகைக்குமேல் ஹஸ்த நக்ஷத்திரம் வந்து மறுநாள் 9நாழிகை வரை இருப்பதால் இச்சங்கை நிகழக்காரணமுண்டாயிருக்கின்றது. அதற்கு வர்ணாச்ரம தர்மகாண்டம் ஸாமக உபர்கர்மப் பிரகரணத்தில்,

"कर्मचेदमपराह्णकार्यम्, अध्यायानामुपाकर्म कुर्यात्कालेऽपराह्णके" इति गोभिलोक्तेः । शुक्लपक्षेतु हस्तेन उपाकर्मापराह्णिकम् इति निर्णयसिन्धौ ।

என்று ஸ்ரீ தீக்ஷிதாளும் கோபிலவசனத்தையும், கமலாகர பட்டர் பிரபந்தத்தையும் குறிப்பிட்டு அபாரஹ்ணத்தில் அதாவது பகல் 18நாழிகைக்குமேல்24நாழிகைக்குள்ளாக ஹஸ்தநக்ஷத்திரமுள்ள காலத்தையேமுக்கியமாய் அப்பிராயப்பட்டிருக்கிறார். அன்றுசிராத்தம்நேரிட்டாலும் சிராத்தம்செய்து பிறகேஉபாகர்மாவைச்செய்ய வேண்டும். எனெனில் உபாகர்மம் அபாஹ்ணகார்யமானபடியால் என்றும் விளக்கியுள்ளார். அதன்படி 21வ அன்றே அப

ராஹ்ணத்தில் ஹஸ்தமிருப்பதால் உரியகாலமாகும் என்பது என் சிற்றறிவின் எண்ணம் மற்றவைகளுக்குப்பண்டிதர்களே சரணம்.

---

குறிப்பு:— திருநெல்வேலி சைவபஞ்சாங்கத்தைத் தவிர வேறொன்றிலும் 22௳ உபாகர்மா போட்டதாகத்தெரியவுமில்லை.

---

## இரண்டு ஸந்தேஹங்களுக்குப் பதில்.

(1) தர்சத்தில் பிரத்யாப்திகம் வந்தால் எப்படிச்செய்வது? இதற்கு சிராத்தகாண்டம் பூர்வபாகத்தில் கூறியவாறு பிரத்யாப்திகத்திற்குப் பிறகு தர்சசிராத்தம் செய்துவருகிறதே சாஸ்திர சிஷ்ட ஸம்மதமாகுமென்று தெரிகிறது. ௸ உத்தரபாகத்தில்

दर्शे प्रत्याब्दिके सति विशेष उक्तः स्मृत्यन्तरे ।

என்றவிடத்தில் பிரகரணம் தர்சசிராத்தவிஷயமாயிருப்பதால் "அமாதினத்தில் மாதா, பிதா, மற்றவர்களுக்கோ பிரத்தியாப்திகம் வந்தால் தனியான பாகத்தால் முதலில் பிரத்தியாப்திகம் செய்து, பிறகு தர்சசிராத்தம், பிராம்மணவிஸர்ஜனம்வரையில் செய்து, பிண்டதானத்துக்குமுன் அமாதர்ப்பணத்தைச் செய்து தர்சசிராத்த பிண்டபிரதானம் செய்யவேண்டும்."

आब्दिके समनुप्राप्ते என்கிறவசனத்தினால் तर्पणं नहि என்பது दर्शे तिलोदकं पूर्वं என்பதைத் தடுக்கிறது. पिण्डात्पूर्वं तु तर्पणं என்பது தர்சசிராத்த பிண்டதானத்துக்குமுந்தியே தவிர பிரத்தியாப்திக பிண்டதானத்திற்கு முந்தியல்ல. தனியான தர்சசிராத்தத்திற்கும் பிரத்தியாப்திகத்துடன் சேர்ந்த தர்சசிராத்தத்திற்கும் வித்தியாஸம் யாதெனில் அன்று தர்சதர்ப்பணம் வழக்கம்போல் தர்சசிராத்தத்துக்குமுந்தி செய்யாமல், அதன்பிண்டதானத்திற்கு முந்தி செய்வதே மாறுதல். ஆகையால் பிரத்தியாப்திகத்தின் மத்தியில் செய்வது சிஷ்டஸம்மதமாகாதுபோலும். இவ்விதம் மேற்கண்ட வசனத்திற்கு தாத்பர்யம் என்பதை நான் வயோவிருத்தர்களான சிஷ்டர்களால் கேள்விப்பட்டிருப்பதுமன்னியில், ஆபஸ்தம்ப பூர்வாபரஸூத்திரங்களை எல்லாவித உரைகளுடன் பரிசீலனை செய்தும் தன் ஜீவியகாலத்தையே இதற்காகச்செலவழித்தும் வேதாந்தமீமாம்ஸாசாஸ்திரங்களை நன்குணர்ந்தும் லோகோபகாரார்த்தமாக ஆபஸ்தம்ப பூர்வாபர பிரயோகங்களை பிரசுரித்து வெளியிட்டிருக்கிற நல்லூர் பிர்மஸ்ரீ கல்யாணஸுந்தரசாஸ்திரிகளின் அபரப்பிரயோகத்திலும் கூறியிருக்கிறது.

आब्दिकं प्रथमं कुर्यात् मासिकं तु ततः परम् ।
दर्शश्राद्धं तृतीयं स्यात् चतुर्थस्तु महालयः ॥

மேற்கண்ட வசனத்தால் ஒன்றாக நேர்ந்தால் முறையே செய்யும் விதம் கூறப்பட்டது. கிரந்தங்களை நேரில் பார்ப்போருக்கும் இவ்வளவேபோதுமென்றும் இந்நிரூபகனும் மேற்கண்டசாஸ்திரிகளிடம் சிலகாலம் தங்கிச்செவியுற்றதனாலேயே ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிபதிகளின் ஸ்ரீமடத்தில் நடந்த தர்மஸதஸ்ஸுக்குப் போக நேர்ந்ததென்றும் இப்பாலும் அப்பரீக்ஷைக்குச்செல்லுவோருக்கு ஷியார் புஸ்தகங்கள் இன்றியமையாத பாடபுஸ்தகமாக (Text) ஆகுமென்றும் தெரிவித்து மற்ற விஷயத்தை "தர்மக்ஞர்கள்" தெரிவிக்கலாகுமென்று வேண்டி இத்துடன் பூர்த்திசெய்தேன்.

## சிராத்தாங்க தர்ப்பண விஷயம்.

இதில் மூன்று ஸம்சயங்கள் 1. சிராத்தம் செய்தபிறகு கர்த்தாவுக்கு தர்ப்பணத்துக்கு முன் ஆசௌசம் வந்தால் ஆசௌச முடிவில் செய்கிறதா? 2. ஆசௌசத்துடன் உக்தகாலத்தில் செய்கிறதா? 3. விட்டுவிடுகிறதா?

(1) देये प्रत्याब्दिके श्राद्धे त्वन्तरामृतसूतके ।
आशौचानन्तरं कुर्यात् ।
आब्दिकेचैव संप्राप्ते त्वाशौचं जायते यदि ।
आशौचे तु व्यतिक्रान्ते तेभ्यः श्राद्धं प्रदीयताम् ॥

மேற்கண்ட வசனங்களினால் ஆசௌசம் கழிந்தபிறகு செய்ய வேண்டிய கர்மாவில் சோதபடியால் ஆசௌசமுடிவில் செய்ய வேண்டியதென்று ஏற்படவில்லை. மாஸிகம்போல் சேர்த்துச் செய்ய காலமுமில்லை.

(2) " सर्वे वर्णास्सूतकेच मृतके राहुदर्शने ।
स्नात्वा श्राद्धं प्रकुर्वीरन् ।
आद्यं श्राद्धमशुद्धोऽपि कुर्यादेकादशेऽहनि ।
कर्तुस्तात्कालिकी शुद्धिरशुद्धः पुनरेव सः ॥ "
" अग्निहोत्रे तु होमार्थं शुद्धिस्तत्कालिकी स्मृता । "

ஆசௌசத்துடன் தத்காலம் சுத்தியடைந்து, பிறகு அசுத்தமாகிறதும், கர்மார்த்தம்சுத்தியைக்கொடுக்கிறதுமான கிரஹணம், ஏகோ

த்திஷ்டம், அக்னிஹோத்ரம், இவைகளில் சொன்னபடியால் ஆசௌசத்துடன் செய்யக்கூடியதென்றும் ஏற்படவில்லை.

(3) "स्मार्तकर्मपरित्यागः राहोरन्यत्र सूतके ।"

"आब्दिके चैव संप्राप्ते" इति विशेषणात् दर्शादिश्राद्धस्य नित्यत्वेऽपि कालान्तरे विधानाभावेन लोपएव ।"

"सर्वे पर्णा" इत्यत्र राहुदर्शनग्रहणात् संक्रान्त्यादिष्वाशौचे श्राद्धं न कर्तव्यमित्युक्तं भवति ॥"

पित्रोःप्रत्याब्दिकश्राद्धं कृत्वा चैव परेऽहनि ।
निषिद्धेऽपि तिलैःकृष्णैः विधिना तर्पयेत्द्विज. ॥

ஆசௌசமுள்ளவன் கிரஹணகாலந்தவிர மற்ற ஆசௌசகாலத்தில் ஸ்மார்த்த கர்மங்களை விட்டுவிடவேண்டுமென்றும் தர்சம், சங்கிரமணம் முதலான காலங்களில் தீட்டு நேர்ந்தால் அவைகள் நித்யமாயிருந்தாலும் வேறுகாலம் கூறாதபடியால் லோபந்தானென்றும் மறுதினம் திலதர்ப்பணம் செய்யக்கூடாத நிஷித்ததினமாயிருந்தாலும் செய்யவேண்டுமென்று சொன்னபடியால் கர்த்தாவின் அசுத்தத்தை ஒப்புக்கொள்ளவில்லை என்று ஏற்படுகிறபடியினாலும், ஏகதேச அங்கலோபத்தால் அங்கியான சிராத்தத்துக்கு லோபம்வாராதென்றும் ஆபஸ்தம்ப க்ருஹ்யஸூத்ரத்தில் எல்லாவற்றிற்கும் பிரகிருதியான மாஸிசிராத்தம் கூறும்போது அதில் ஸுதர்சனாசாரியார்,

"अत्रचेदं वक्तव्यं ब्राह्मणभोजनं, होमः पिण्डदानञ्च त्रीण्यपि मासिश्राद्धे प्रधानानि ।

என்று போஜனம், ஹோமம், பிண்டதானம், இம்மூன்றையும் தான் முக்கியமாகவும் கூறியுள்ளார்.

ஆகையால் எதிர்பாராத ஆசௌசத்தினால் அங்கமான தர்ப்பணலோபம் அங்கியைப் பாதிக்காதென்று தோன்றுகிறது. மேற்கண்ட ஸமாதானமும் பிரகாராந்தரமாகப் பண்டிதர்களை ஸித்தாந்தம் தெரிவிக்கும்படியாய் வணங்கிக் கேட்டுக்கொண்டதேயாகும். பிரமாணவசனத்துடன், இதில் ஏற்படும் ஆக்ஷேபங்களையும் ஏத்துக்கொள்ளச் சித்தமாயிருக்கிறேன்.

'க்ருஹ்யக்ஞ' வி. உமாமகேச்வரசாஸ்திரி;
காட்டுமன்னார்கோவில்.

## ஆர்யஸமாஜமும்
## ஜாதிக்கலப்புவிவாகம் கைம்பெண்கள் விவாகங்களும்.

ஆர்யஸமாஜத்தை ஆதியில் ஏற்படுத்திய தயானந்த ஸரஸ்வதி ஸ்வாமி ருக்வேதம் முதலான வேதங்களுக்குத் தம்மால் செய்யப்பட்ட பாஷ்யத்தின் முகவுரையாக "ऋग्वेदादिभाष्यभूमिका" ருக்வேதாதி பாஷ்யபூமிகா என்ற ஒரு புஸ்தகத்தை ஸம்ஸ்கிருதபாஷையில் எழுதியிருக்கிறார். அதில் மேற்கண்ட விஷயங்களைப்பற்றி விஸ்தாரமாகச் சொல்லியிருக்கிறார். தயானந்தர் "நியோகம்" என்ற தலைப்பெயரின்கீழ் தன்னுடைய அபிப்ராயத்துக்கு ஆதாரமாக ருக்வேதம்; அதர்வவேதம் இவைகளிலிருந்து சில மந்திரங்களுக்கு தன்னால் செய்யப்பட்ட பாஷ்யத்தைக் கூறியிருக்கிறார். அவைகளில் தற்சமயம் நமக்கு உபயோகமாயுள்ள சிலவற்றை மாத்திரம் எடுத்துக்கொள்வோம்.

......विधवेव देवरं मर्यं नयोषा कृणुते सधस्थ आ।

(ருக்வேதம் அஷ்டகம் 7, அத்தியாயம் 8, வர்க்கம் 18, மந்திரம் 2.

இந்த மந்திரத்திற்கு தயானந்தருடைய ஸொந்த ஸம்ஸ்கிருத பாஷ்யம் பின்வருமாறு—

(विधवेव देवरं) यथा देवरं द्वितीयं वरं नियोगेन प्राप्तं विधवा इव। अत्र प्रमाणं "देवरः कस्मात् द्वितीयो वरः उच्यते।" निरुक्तं अध्या–६, ख–१५। विधवया द्वितीयपुरुषेण सह नियोगकरणे आज्ञास्ति तथा पुरुषस्य च विधवया सह। विधवास्त्री मृतकस्त्रीकपुरुषेण सहैव सन्तानार्थं कुर्यान्न कुमारेण सह तथा कुमारस्य विधवया सहच। अर्थात् कुमारयोः स्त्रीपुरुषयोरेकवारमेव विवाहः स्याम्। पुनरेवं नियोगश्च नैव द्विजेषु द्वितीयवारविवाहो विधीयते। पुनर्विवाहस्तु खलु शूद्रवर्ण एव विधीयते तस्य विद्याव्यवहाररहितत्वात्। नियोजितौ स्त्रीपुरुषौ कथं परस्परं वर्तेतामित्यत्राह। (मर्यं न योषा) यथा विवाहितं मनुष्यं (सधस्थे) समानस्थाने सन्तानार्थं योषा विवाहितस्त्री (कृणुते)

आकृणुते । तथैव विधवा विगतस्त्रीकश्च सन्तानोत्पत्तिकरणार्थं परस्परं नियोगं कृत्वा विवाहितस्त्रीपुरुषवद्वर्त्तेयाताम् ।

இந்த மந்திரத்தில் विधवेव देवरं என்பதற்கு 'இரண்டாவது கணவனையடைந்த விதவையைப்போல்' என்று தயானந்தர் அர்த்தம் செய்கிறார். தேவா என்ற ஸம்ஸ்கிருதபதத்திற்குக் கணவனுடைய ஸஹோதரன் என்று அர்த்தம். வேதாங்கங்களிலொன்றாகிய நிருக்தத்தின்படி இரண்டாவது கணவன் என்று அர்த்தம் ஏற்படுமென்று தயானந்தர் சொல்லுகிறார்.

"விதவையானவள் நியோகத்தால் இரண்டாவதுகணவனைச் சேரவும், அவ்விதமே மனிதன் விதவையைச் சேரவும் (வேத) ப்ரமாணமிருக்கிறது. விதவை நியோகத்தால் ப்ரஜோத்பத்திக்காக தாரமிழந்த புருஷனோடுமாத்திரம் சேரலாம், விவாஹமாகாதவனோடு சேரக்கூடாது, அவ்விதமே விவாஹமாகாதவன் விதவையோடு சேரக்கூடாது. அதன் கருத்தென்னவெனில் விவாஹமாகாத சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் விவாஹமென்பது ஒரே ஒரு தடவைதான். அன்றியும் இந்த நியோகம் என்பது த்விஜர்களுக்குள் கூடவேகூடாது. மறுமணம் செய்துகொள்ளுதல் சூத்திரவர்ணத்தாருக்கே ஏற்பட்டது. இவ்விதம் (புதிதாய்) ஜோடி சேர்ந்துகொண்ட ஸ்திரீபுருஷர்கள் எவ்விதம் நடந்துகொள்ளவேண்டுமென்பதை வேதம் அடியிற் கண்டவாறு விவரிக்கிறது. ஒரு விவாஹமான ஸ்திரீ தன்னை விவாஹஞ்செய்த கணவனோடு ஸரியான இடத்தில் ப்ரஜோத்பத்திக்காக எவ்விதம் சேருவாளோ, அவ்விதமே விதவையும் தாரமிழந்தவனும் நியோகத்தால் ப்ரஜோத்பத்திக்காகப் பரஸ்பரம் ஒன்றுசேர்ந்து விவாஹமான ஸ்திரீயும் புருஷனும் ஒத்துவாழ்வதுபோல்வாழவேண்டும்." இதுதான் தயானந்தர் ஷை ருக்வேதமந்திரத்திற்குச் செய்திருக்கும் ஸம்ஸ்கிருதபாஷ்யத்தின் அர்த்தம்.

தயானந்தர் மற்ற வேதமந்திரங்களுக்குச் செய்திருக்கும் வ்யாக்கியானங்களையும் விவரணங்களையும்பற்றி விசாரிக்கப்புகும் முன் மேற்சொல்லியவைகளிலிருந்து நமக்கு ஆவச்யகமான ஸாராம்சங்களை எடுத்துக்கொள்வோம். த்விஜன் என்ற ஸம்ஸ்கிருதபதத்திற்கு முதல் மூன்றுவர்ண வகுப்பு ஜாதியாகிய பிராம்மண க்ஷத்திரிய, வைச்ய என்று அர்த்தம்.

1. தயானந்தர் நியோகம் [ஆபத்காலத்தில் ப்ரஜோத்பத்தியின்பொருட்டு விதவை வேறொரு புருஷ(தாரமிழந்தவ)னோடு சேருதல் ]த்விஜர்களுக்குள்கூடவே கூடாதென்று சொல்வதால், அவர் வர்ணாச்ரமவ்யவஸ்தையை ஒப்புக்கொள்ளுகிறார். ஆகையால் வர்ணாச்ரமதர்மம் இந்த நிலைமையிலேயே நடைபெறவேண்டியதென்றும் மேல்ஜாதி கீழ்ஜாதிகளுக்குள் கலப்புவிவாஹம் கூடாதென்றும் ஏற்படுகிறது.

2. தயானந்தர் விவாஹமாகாத சிறுவர் சிறுமிகளுக்குள் ஒரே தடவைதான் விவாஹம் நடைபெறவேண்டுமென்பதை ஒப்புக்கொள்ளுகிறார். ஆகையால் ஹிந்துமனைவி தன் கணவனுடைய ஜீவதசையில் விவாஹக்கட்டைமீறி வேறொருவனுடன் விவாஹம் செய்துகொள்ளக்கூடாது. தவிரவும் த்விஜ (ப்ரஹ்ம, க்ஷத்திரிய வைச்ய) விதவை ஸ்வஜாதியிலுங்கூட தாரமிழந்தவனையாவது விவாஹமாகாதவனையாவது மறுமுறை விவாஹம் செய்துகொள்ளக்கூடாது.

3. தயானந்தர் சூத்திரர்களுக்குள்ளும் நியோகம் என்பது விதவைக்கும் தாரமிழந்தவனுக்குந்தான் கூடுமென்றும், விதவைக்கும் மனைவியுள்ளவனுக்கும் கூடாதென்கிறார்.

4. தயானந்தர் சூத்ரர்களுக்குள் நியோகம் நடைபெறவேண்டுமென்று வற்புறுத்துவதற்கும், அவர்கள் தத்துவவிசாரத்திற்கு முற்றும் அநர்ஹர்களென்று சொல்வதற்கும் தக்க ஆதாரமில்லாமையால் ஏதோ நாகரீகமற்ற காட்டுப்பிராண்டிஜனங்களை தன் மனதில் வைத்துக்கொண்டு இவ்விதம் எழுதியிருக்கிறார்.

ஆர்யஸமாஜிகளுக்குத் தலைவராயிருந்த லாலாலஜபதிராய் இறந்தபொழுது அவர் வைச்யஜாதி என்று சில ஸமாசாரப்பத்திரிகைகளில் குறிப்பிடப்பட்டிருந்தது. இப்பொழுதோ ஆர்யஸமாஜிகளுடைய ஆதரவின்பேரிலும் அவர்கள் செய்துவரும் வேலைகளாலும் வர்ணதர்மங்கள் கெடுக்கப்பட்டுவருவதையும் ஜாதிக்கலப்பு விவாஹங்களும் விதவைகளுக்கும் விவாஹமாகாத புருஷர்களுக்குங்கூட ஜாதிக்கலப்பு விதவாவிவாஹங்கள் நடைபெறுவதையும் அடிக்கடி ஸமாசாரப்பத்திரிகைகளில் காண்கிறோம். ஆர்யஸமாஜிகள் ஆர்யஸமாஜத்தை ஸ்தாபித்த தங்கள் சொந்த மதகுருவாகிய தயானந்த ஸ்வாமியின் கட்டளைகளுக்கு முற்றும் விரோதமாக

நடந்துகொண்டு தாங்கள் அவருடைய முக்கிய சிஷ்யர்களாகவும் அவருடைய கொள்கைகளை ப்ரசாரம் செய்கிறவர்களாகவும் பாசாங்குசெய்துவருகிறார்களல்லவா? ஸத்யமே! விழித்துக்கொள். என்னுடைய புதிய ஆராய்ச்சியுடன் மறுபடியும் உன்னிடம் வருகிறேன்.

T. S. நடேசசாஸ்திரியார்,
வால்மீகி, மாயவரம்.

---

## பிருஹதீச்சுவரமான்மியம் என்னும்
# சோழமன்னர்களின் சரித்திரம்.

(448-வது பக்கத்தொடர்ச்சி.)

ஹாரதத்தர்:— பக்தர்கள் துயரை நீக்கும் மஹாதேவர் உன்விஷயத்திற் பிரசன்னராக இருக்கின்றார். இச்சம்ஸாரமாகிய பிணி நீங்க நாம் மஹேசனைத்தான் வேண்டவேண்டும். வைத்தியர்களுக்கெல்லாந் தலைமைபெற்ற அச்சிவனும் குட்டத்தைப் போக்குவார் என்பதிற் சந்தேகமில்லை. சிவனாணையை உனக்கறிவிக்கிறேன். உன்பொருட்டு அக்கினீச்சுவரர் என்ற ஸ்வயம்புவை வேண்டிவந்தேன். ஓர் மண்டலத்தின் முடிவிற் கனவில் மஹேசன் தோன்றிக் கூறலானார்:—

"சமீவனத்தில் தஞ்சேசனுக்குத் தெற்கில் காதலேசருக்கு மேற்கிலோர் நிர்மாணஞ்செய். அங்கு ஓர் நர்மதாலிங்கத்தை வைத்துப் பூஜைசெய். சிவகங்கையென்னுங் குளத்தின் தென்பாகத்திற் கான் பூஜைசெய்த இடத்திற் கான் பூஜித்த மண்மயமான லிங்கக்குவியல்களின்றும் காணப்படுகின்றன. காவேரி நதியின் தென்றிசையில் வீணாநதிக்கும் (வெண்ணாறு) தெற்கேயுள்ளதும், சமீவனேசரினாலயத்திற்கு வடக்கேயுள்ளதுமான, மணிமுக்தாநதி(வடவார்)யில் முழுகுவதனால் எவ்வித பாபங்களும் நீங்கும். வைசாகம், துலாம், கார்த்திகம், மாகமென்ற இம்மாதங்களின் பர்வாக்களில் விடியற்காலையில் அவ்வீணாநதியில் ஸ்நாநம் செய்து, ஆநந்தவல்லியுடன் தஞ்சேசரும், காதலேசரும், வஸிஷ்டேசரும், கொங்கணேசரும், பிருஹதீசரும் இருக்கின்ற ஐந்து

ஸ்தலங்களையுந் தரிசிப்பவன் கைலாஸமடைகிறான் என்பதிற் சந்தேகமில்லை, அத்தலங்களில் அங்கப்பிரதக்ஷிணம் செய்தால் எப்பாதகத்தினின்றும் விடுபடுகிறான். "தொந்திக்கணபதி" சக்தியிற் கொண்ட குமரன் நீலமேகர், நாசிம்மரிவரிவர்களை நமஸ்கரித்து, கிழக்கிலுள்ள "மாரியையும்" மனிதர் ஸ்போடத்தைப் போக்கும் "துர்க்கையையும்" விஜயா, காவேரி, ரேணுகா, காளிகா, மர்த்தினி, கோடிகாவென்றவர்களையும், சிராவண மாதங்களில் ஞாயிற்றுக்கிழமைகளிலும், வெள்ளிக்கிழமைகளிலும், பூஜிப்பவர்கள் எவ்விதத் துன்பமும் நீங்கிச் சுகமடைகின்றனர், இக்ஷேத்திரங்களிற் பிரதக்ஷிணம் செய்வோர்களின் பாவங்கள் பறந்துபோம்" என்று கனவு விருத்தாந்தத்தை உன்னிடம் கூறி, பரமசிவன் அருளை உன்னிடம் அறிவித்தேன். உயரமானதோர் கோபுரம் கட்டுவித்து, நர்மதாலிங்கமொன்றைக் கொண்டுவா? "காஞ்சிபுரத்தில்" நின்றுஞ் சிறந்த சிற்பியை அழைத்துவந்து அப்பிருஹதீச்சுவரனென்னும் லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்வாயாக. அதனால் உன் குட்டம் தொலையும். சிவனாணையை உனக்குக் கூறினேன். மந்திரிகளுடன் ஆலோசித்துத் தாமதமின்றி இவைகளையுடனே செய்வாயாக.

## 13. அத்தியாயம்.

ஸூதர்:— இவ்வாறு குருவாகிய ஹரதத்தரின் வார்த்தைகளைக் கேட்டு கரிகாலனென்னும் மன்னன் ஆனந்தக்கண்ணீருடன் மந்திரிகளிடமுரைக்கலானான்'

கரிகாலன்:— மஹாமஹிமை பொருந்திய சிவபக்தரான என் ஆசிரியன் கட்டளையைத் தடையின்றிச் செய்வேன். தேவையான பொருள்களைக் கொண்டுவாருங்கள். நன்மை பயக்குந் தன்மை வாய்ந்த நர்மதை என்னும் புண்ணிய நதியினின்றும் லிங்கத்தைக் கொண்டுவருவதற்கு யான் ஹரதத்தருடன் நல்ல லக்கினத்தில் நல்ல முகூர்த்தத்திற் கிளம்பிச்செல்லுகிறேன். வேண்டிய பொருள்களை மிக்க அளித்து, அச்சிற்பத் தலைவனை பல்லக்கிலேற்றி, தூதர்களைக் கொண்டு இங்கு என்னிடத்திற் கழைத்துவரச் செய்யுங்கள்.

இவ்வாறு அரசன் உரைத்த சொற்களை எல்லோருஞ்சிரமேற் கொண்டனர்.

'ஏ அரசனே! குஷ்டம் நீங்கும் முறையை மஹேசன் கருணையுடன் கூறியதால் இப்பொழுதுதான் தன்யரானீர். கிருதகிருத்யரானீர். தாமதமின்றிச் சிவனுக்கு ஓர் உயரமுள்ள ஆலயம் கட்டுவிப்பீராக. இப்புவியில் நதி நதங்களும், ஆகாயத்திற் சந்திர ஸூரியர்களுமுள்ள வரையிலும் புகழ்நிலை நிற்கும். நீரும் கைலாஸவாஸம் பெறுவீர். நீர் சோழவம்சக் கடலில் உதித்த முத்துப்போன்ற "கரிகாலனல்லவா? இவ்விலக்கினமே மிக்க சுபமானது. வெகுசீக்கிரத்தில் இவைகளைச் செய்யவேண்டும் என்று மந்திரிகளும் சோதிடர்களும் சொல்லினர்.

அரசனுட்கள் "ஸோமவர்மா" என்ற சிற்பியை அழைத்துவந்து உபசரித்தனர். அச்சிற்பத் தலைவன் ஆயிரக்கணக்கான சிற்பிகளுடன் பூமியை வெட்டித் "தொந்திவிநாயகரை" ஆலயத்திற் பிரதிஷ்டை செய்தான். அரசன் மிக்க பக்தியுடன் தூர்வைகளால் அர்ச்சித்து தேங்காய்கள், பழங்கள், இனியமோதகங்கள் முதலியவைகளை நிவேதனம் செய்து சந்தோஷத்துடன் துதிக்கலானான்.

கரிகாலன்:— தந்த மோதகங்களைக் கையிலேந்தியவரும் இக்ஷேத்திரத்தில் வசிக்கும் மனிதர்களின் எல்லா இடையூறுகளையும் போக்குகிறவருமான மஹாகணபதியே! உம்மை வணங்குகிறேன். உமக்கு பாத்திரபத-மாதம் சதுர்த்தியுற்சவம் நடத்தி உம்மைத் தரிசிப்போரின் விக்கினசமூகங்களைப்போக்கும்.

இவ்வாறு கூறி வணங்கிக் கோபுராரம்பஞ் செய்யத்தொடங்கினான். அரசன் ஸோமவர்மாவைக்கூப்பிட்டு வஸ்திராலங்காரங்களாலுபசரித்து அமைச்சர்களுடன் கைகூப்பிக்கொண்டு உரைக்கலானான்.

கரிகாலன்:— சிவகைங்கர்யம் செய்யுமாறு சிவனாலுத்திரவிடப்பட்டேன். கோபுரம் கட்டுவதற்கு நீ உதவவேண்டும். உனக்குத் தேவையான பொருள்களைத் தடையின்றியளிப்பேன். சிற்பசாத்திரத்திற் கூறியவண்ணம் தடையின்றிச் செய்யத்துடங்குவாயாக. சிவகைங்கர்யத்திற்காக உயிரையும் விடத்துணிவேனெனில் தனதான்யங்கள், மனைவி, பூமி இவைகளையும் துரக்கச்சம்மதிப்பேனென்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

இவ்வாறு அரசன் சொல்லைக்கேட்டுச்சந்தோஷமடைந்த சிற்பித்தலைவனான ஸோமவர்மா விக்கினேசருக்குமேற்கில் சிற்பிகளுக்

குக்குலதெய்வமும் தன்னிஷ்டதேவதையுமாகிய காளிகாதேவியை ஓராலயங்கட்டிப் பிரதிஷ்டைசெய்து மற்றெல்லா சிற்பிகளுடனும் பஞ்சாமிருதம், கந்தம், புஷ்பம், தூபம், தீபம், நிவேதனம் முதலியவைகளாற் பூஜை செய்தான். ஸோமவர்மா காளியை நமஸ்கரித்து ஸ்தோத்திரஞ் செய்பலானான்.

ஸோமவர்மா:— ஏ காளியே! ஏ சிற்பிகளுக்கு வாளளிக்கும் காளியே! உன்னை வணங்குகிறேன். இவ்வூரில் வசிப்பவர்களினிடையூறுகளைப் போக்குவாயாக. எவ்வாசையையும் அளிக்க வல்லவளே! எப்பொழுதுஞ் சிற்பிகளுக்கு வரங்கொடுத்தருள்வாயாக. பிருஹதீச்சுவரரின் மஹோத்ஸவங்களுக்குமுன்பாக உன் திருவிழாவைச் சிற்பிகள் செய்துவரட்டும்.

இதைக்கேட்டுச் சந்தோஷமடைந்த காளிகாதேவியுரைக்கலானாள்.

காளீ:— இவ்வரசன் கட்டளையிட்டுள்ள இப்பிருஹதீசரின் ஆலயத்தைத் தடையின்றிச் செய்துமுடிப்பாயென்பது திண்ணம். எப்பொழுதுஞ் சிற்பிகளுக்கருள்புரிந்துகொண்டு இங்கிருந்து வருகிறேன். வெள்ளி செவ்வாய்க்கிழமைகளில் என்னை அர்ச்சிப்பவர்களுக்கு விரும்பியவற்றையெல்லாம் அளிப்பேன்.

இவ்வாறு கூறிவிட்டுக் காளிகாதேவி மறைந்தாள். சிற்பித்தலைவனும் ஸந்தோஷமடைந்தான். இன்னும் அத்தலத்தில் வடக்குநோக்கியிருக்கும் அக்காளிகாதேவி சிற்பிகளாற் பூஜிக்கப்பட்டவளாக இருந்துகொண்டு தன்னை வணங்குவோருக்கு வரம் அருளிவருகிறாள்.

## 14 அத்தியாயம்.

கரிகாலன் என்னும் வேந்தன் சீக்கிரமாக அம்மலையினடிவரையில் வழிகளிற் சிறந்த குதிரைகள், தனதான்யங்கள், தங்கம் முதலியவைகளால் நிரப்பினான். நவதான்யங்களும் நிறைந்துள்ள கடைகளையெல்லாம் ஏற்படுத்தினான். அடிக்கடி தண்ணீர்ப்பந்தல்களையும் அன்னசாலைகளையும் நிர்மாணஞ்செய்தான். கருங்கற்களை இழுத்துவருவதற்காகப் பெரிய சக்கரங்களையுஞ் சிறந்தவெருமைகளையுந் தயார்செய்தான். பிறகு நல்ல குதிரையின்மீதேறி அர

சன் இளம்பிச்செல்ல எத்தனிக்கையில் அங்கு வேலைக்காரர்கள் பொருள்களைக் கொண்டுவந்து கொடுக்கவந்தனர். அப்பொழுது இம்மன்னவன் 'சிற்பத்தலைவனிஷ்டப்படி செலவிடட்டுமென்று' கூறினன். அதனைக்கேட்ட அச்சோமவர்மா மிக்கக் களிப்புடன் 'இவ்வரசனே இவ்வுபரமான கோயிலைக் கட்டுவிக்கப்போகிறான்' என்று சொல்லிக்கொண்டு பல சிற்பிகளுடன் மலையடிவாரஞ் சென்று, அங்கு நேர்த்தியானதோர் மலையின் சிகரத்தைத் தன் கையிலுள்ள உளியால் வெட்டி வீழ்த்தினன். . பிறகு பெரிய சக்கரங்களமையப்பெற்ற வண்டியின்மீது பல கற்களையுமேற்றிக் கொண்டு இழுத்துவந்துசேர்ந்தான். அதைக்கண்ணுற்ற அரசன் அச்சிற்பியைபழைத்து வஸ்திரபூஷணங்களாலுபசரித்தான். இதனால் மிக்கவானந்தங்கொண்ட சிற்பி தான் யாது செய்யவேண்டுமென வினவ மன்னன் உரைக்கலானன்.

கரிகாலன்:— சிவகைங்கர்யஞ்செய்யுமாறு சூலபாணியால் ஏவப்பட்டிருக்கிறேன். ஏ ஸோமவர்மனே! நீ நல்ல பல சிற்பிகளுடனுஞ் சிற்பசாஸ்திரத்திற் சொல்லியவாறு சீக்கிரமாகக் கோபுராரம்பஞ்செய்வாயாக. நான் ஹாதத்தருடனும் அறுபத்தினன்கு வணிகர்களுடனும் லிங்கத்தைக் கொண்டுவருவதற்காக நர்மதாநதிக்குச் சென்றுவருகிறேன். நாளை விடியற்காலம் நல்ல வேளையெனச் சோதிடர்கள் கூறியிருக்கின்றனர்.

அதைக்கேட்ட அக்கரிகாலமன்னனினமைச்சர்கள் 'உங்களாணைப்படியே சிற்பிகளைக்கொண்டு வேலை நடத்துகிறோம்'எனச் சொல்லினர். 64-வணிகர்களுடன் நர்மதைசென்று அவர்களைக் கொண்டு லிங்கத்தை இழுத்துவரச்செய்' என்று இரவிற் கனவிற் சிவனிட்டவாணையைக் காலையிற் சபையிலறிவித்து, தூதர்களால் அவ்வணிகர்களையழைத்துவரச்செய்து, வஸ்திராபரணங்களாலுபசரித்து மஹேசனுணைப்படி லிங்கங்கொண்டுவரச்செல்லுமாறு அவர்களைக் கட்டளையிட்டான். இடையூறின்றிக் காரியம் நடைபெறுமாறு தொந்திவினபகரை வணங்கிச்செல்வோமென அறுபத்தினன்கு வணிகர்களுஞ்சென்று பிரார்த்திக்கத் தலைப்பட்டனர்.

(தொடரும்.) என். வைத்திநாதசாஸ்திரி,

சாஸ்வதிமஹால் தஞ்சை.